# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 116/2023 | Date : 17.07.2026 | PW 1 |
|---|---|---|
| Name: கேசவன் | த/பெ.மோகன கிருஷ்ணன் | |

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக எனது மகன் பயணித்த வாகனத்தை ஓட்டிய சுஜய் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் அவிநாசி போலிசார் வழக்கு பதிவுசெய்தனர் என்றால் சரிதான். மேற்படி சுஜய் அளித்த புகாரில் லாரியின் ஓட்டுநர் திடீரென லாரியை நிறுத்தியதால்தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துக்கு காரணம் லாரி ஓட்டுநரின் அஜாக்ரதைதான் என்பதால் லாரியின் காப்பீட்டு நிறுவனமான 2 ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீட்டை வழங்கவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் பயணித்த வாகனத்தை ஓட்டிய சுஜய்க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் பயணித்த வாகனத்தை ஓட்டிய சுஜய்க்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 4 ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் வழங்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட வைத்து பாலிஸி விதிகளை மீறியதால் 4 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழககைப்பொறுத்து 4 ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

ஒம்/−கேசவன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/−ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.